9th Social Science Lesson 2 Notes in Tamil

2. பண்டைய நாகரிகங்கள் - சிந்துவெளி நாகரிகம்

அறிமுகம்

- சமுதாயங்கள் மேற்கொண்ட மேம்பட்ட வாழ்வியல் முறைகள் பண்டைய வேட்டையாடுதல் – உணவு சேகரித்தல் குழுக்கள் மற்றும் புதிய கற்கால வேளாண்மைச் சமுதாயங்களில் வாழ்வியலை விட ஒழுங்கமைவு கொண்டதாக அமைந்திருந்தன.
- நகரச் சமூகங்களானது சமூக அடுக்குகளையும், நன்கு திட்டமிடப்பட்ட நகரங்களையும் கொண்டிருந்தன. அவர்கள் கைவினைத் திறன்களையும், வணிகம் மற்றும் பண்டமாற்று முறைகளையும், அறிவியல் தொழில் நுட்பத் தகவமைவையும், அமைப்பு ரீதியான அரசியல் அமைப்பையும் (தொடக்கநிலை அரசு) கொண்டிருந்தனர்.
- இதனால், பண்டைய சமூக அமைப்புகளில் இருந்து இவர்களைப் பிரித்துக்காட்ட ‘நாகரிகம்’ என்ற சொல்லாடல் பயன்படுத்தப்படுகிறது. இதனால், இவர்கள் இதற்கு முந்தைய சமூகங்களை விட உயர்வானவர்கள் என்று கருதி விடக்கூடாது.
- ஏனெனில் ஒவ்வொரு பண்பாடும் நாகரிகமும் தனக்கான தனித்த வாழ்வியல் கூறுகளைக் கொண்டுள்ளன.

பண்டைய சமூகங்களும், பண்டைய அரசு உருவாக்கமும்

- நவீன காலத்துக்கு முந்தைய சமூகங்கள்- குழுக்கள், தொல்குடிகள், குடித்தலைமை முறை மற்றும் அரசுக்கு முந்தைய நிலைகள் என அறிஞர்களால் வகைப்படுத்தப்படுகின்றன.
- இடைக்கற்காலத்திற்கு முன்பு தொடக்ககாலச் சமூகங்கள் மக்கள் **குழுக்களாகவே (bands)** இருந்தன. இந்தக் குழுக்கள் என்பது நாடோடிகளாக இருந்த **வேட்டையாடுவோர், உணவு சேகரிப்போர்** ஆவர்.
- புதிய கற்கால வாழ்க்கை முறை தொடங்கியபோது, கிராமங்களில் பெரிய குழுக்களாக மக்கள் திரள ஆரம்பித்தனர்.
- இவர்கள் ஒரு பகுதியில் வாழும் உறவுமுறையால் இணைக்கப்பட்ட **தொல்குடி சமுதாயங்களாக** இருந்தார்கள்.
- இடைக்கற்காலக் காலகட்டத்தில் உருவான தொல்குடி அமைப்புகள் பெரும்[பாலும் சமத்துவ இயல்பு கொண்டதாகவே இருந்தது.
- **தலைவரின் கீழான குழுக்கள்** (குடித்தலைமைன் முறை chifdoms என்பவை இனக்குழு அமைப்புகளைவிடச் சற்றுப்பெரிய அரசியல் அமைப்புகள்.

- இவர்கள் தொல்குழிகள் வாழ்ந்த இடங்களை விடப்பெரிய பரந்த இடங்களில் வாழ்ந்தார்கள். இவர்கள் உறவுமுறை அடிப்படையில் இணைந்தவர்கள் என்றாலும், இவர்கள் அனைவரும் சரிசமமானவர்களாக இல்லை.
- இக்குழுவில் செல்வம், அதிகாரம் ஆகியவற்றின் காரணமாகச் சமூக வேறுபாடுகள் நிலவின.
- புதிய கற்காலத்திற்குப் பிறகு ஆறுகளும், மண்வளமும் கொண்ட குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சி நாகரிகங்களாக வளர்ந்தன.
- புதிய கற்காலத்துக்குப் பிந்தைய காலத்தில் அதாவது வெண்கலக் கால சமுதாயங்களில் வேளாண்மை உபரியும், மக்கள் தொகை நெருக்கமும் உள்ள இடங்களில் அரசுக்கு முந்தைய நிலை அரசுகள் (Protostate) உருவாகின.
- இந்த அமைப்பு தாம் போரில் கைப்பற்றிய பல சிறிய பகுதிகளையும், குழுத் தலைவர்களையும், நகரங்களையும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளும் அரசியல் அமைப்பாக இருந்தது.
- சமூகப் படிநிலையில் அரசர்களும், அரச குடும்பத்தினரும் உயர்ந்த நிலையில் இருந்தார்கள். இவர்கள் வசிக்க வசதி மிக்க கட்டிடங்கள் கட்டப்பட்டன.
- மதகுருமார்கள், வணிகர்கள், அரசரின் அதிகாரிகள் ஆகியோர் நடுத்தர அடுக்கில் இருந்தார்கள்.
- கைவினைக் கலைஞர்களும் விவசாயிகளும் சமூகப் படிநிலையின் அடித்தட்டில் இருந்தார்கள்.
- விவசாயிகளிடமும் கைவினைக் கலைஞர்களிடமும் வரி வசூலிக்கப்பட்டது. மொழியும், இலக்கியமும் வளர்ந்தன.
- அறிவியலும், கணிதமும், வானவியலும் ஆராய்ச்சிகள் மூலம் வளர்ந்தன. நகரமயமாக்கல் செயல்முறை தொடங்கியது.

பண்டைய நாகரிகங்கள்

- **நாகரிகம் என்பது ஒரு முன்னேறிய, முறைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை என்று கருதப்படுகிறது.**
- ஒரு குறிப்பிட்ட சுற்றுச்சூழலுக்கும் பண்பாட்டுக்கும் ஏற்ப உருவான தகவமைப்பு என்று கருதத்தக்க வாழ்க்கை முறையை நோக்கி அது இட்டுச் செல்கிறது.
- அதிகமான எண்ணிக்கையில் மனிதர்கள் அருகருகே வாழ்வது அவசியமாகிற போது, அவை திட்டமிடல், முறைப்படுத்துதல், தனித்தன்மை பேணுதல் ஆகியவற்றைக் கொண்டு வந்தனர்.
- பின்பு, குடியிருப்புகளைத் திட்டமிட்டு உருவாக்க வேண்டியிருந்தது. ஓர் அரசியல் அமைப்பு உருவானது, சமூகம் ஒழுங்குபடுத்தப்பட்டது.
- உணவு மற்றும் கைவினைப் பொருட்களின் உற்பத்தி முறைப்படுத்தப்பட்டது.

- நாகரிகங்கள் வடிவம் பெறத் தொடங்கியதும் மிகப் பெரிய கட்டடங்களை எழுப்பினர். எழுத்துக் கலையை உருவாக்கினர். அறிவியலும், தொழில்நுட்பமும் சமூக மேம்பாட்டிற்குப் பங்காற்றின.
- செழிப்பான பகுதிகளின் விவசாயிகள் உற்பத்தி செய்த உபரி உணவு, பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு உணவளிக்கப் போதுமானதாக இருந்தது.
- பயிர்வளர்ப்பில் ஈடுபடாத மற்றவர்கள் வெண்கலக் கருவிகள், அணிகலன்கள், மட்பாண்டங்கள் செய்தல் போன்ற கைத்தொழில்களில் ஈடுபட்டனர்.
- மதகுருமார்கள், எழுத்தர்கள், பிரபுக்கள், ஆள்பவர்கள், நிர்வாகிகள், கைவினைக் கலைஞர்கள் ஆகியோர் இந்த நாகரிகத்தின் அங்கங்களாகினர்.
- **எகிப்திய, மெசடோமிய, சிந்துவெளி , சீன நாகரிகங்களில் முக்கியமானவையாகும்**.
- இந்த நாகரிகங்கள் தழைத்த அதே காலக்கட்டத்தில் , உலகின் மற்ற பகுதிகளில் வாழ்ந்தோர் வேட்டையாடும் உணவு சேகரிப்போராக, மேய்ச்சல்காரர்களாக வாழ்ந்தார்கள்,.
- வேட்டையாடுவோர் – உணவு சேகரிப்போரும் , மேய்ச்சல் சமூகத்தினரும் இந்த நாகரிகங்களோடு ஊடாட்டங்கள் மூலம் உறவு பேணத் தொடங்கினர். அவர்களது வரலாறும் அதே அளவில் முக்கியமானதுதான்.
- இந்த நாகரிகங்களின் சம காலத்தில் தென்னிந்தியாவில் புதிய கற்கால வேளாண்மை மேய்ச்சல் சமுதாயங்களும், நுண்கற்கருவிகள் பயன்படுத்தும் வேட்டையாடுவோர் – உணவு சேகரிப்போர் சமுதாயங்களும் வாழ்ந்தனர்.

எகிப்திய மம்மிகள்

- ✓ *பதப்படுத்தப்பட்ட இறந்த உடல் மம்மி எனப்படும்.*
- ✓ ***இறந்தவர்களின் உடல்களை சோடியம் கார்பனேட், சோடியம் பைகார்பனேட் ஆகியவற்றின் கலவையான நாட்ரன் உப்பு என்ற ஒரு வகை உப்பை வைத்துப் பாய்துகாக்கும் வழக்கம் எகிப்தியரிடையே இருந்தது**.*
- ✓ *நாற்பது நாட்களுக்குப் பிறகு, உப்பு உடலின் ஈரப்பதம் அனைத்தையும் உறிஞ்சிய பிறகு, உடலை மரத்தூளால் நிரப்பி , லினன் துண்டுகளால் சுற்றி, துணியால் மூடி வைத்துவிடுவார்கள்.*
- ✓ *உடலை சார்க்கோபேகஸ் எனப்படும் கல்லாலான சவப்பெட்டியில் பாதுகாப்பார்கள்.*

டூடன்காமனின் முகமூடி

டூடன்காமனின் பதப்படுத்தப்பட்ட உடல் (மம்மி)

- ✓ ***பேப்பர் என்ற சொல் "பாப்பிரஸ்" (Papyrus) என்ற தாவரத்தின் பெயரிலிருந்து வந்தது***. *எகிப்தியர்கள்* ***காகித நாணல் (பாப்பிரஸ்)*** *என்ற தாவர தண்டிலிருந்து தாள்களைத் தயாரித்தனர். இத்தாவரம்* ***நைல் பள்ளத்தாக்கில் அதிகமாக வளர்ந்தது.***
- ✓ ***அக்காட் நகரம் தான் பின்னர் பாபிலோன் என்று அழைக்கப்பட்டது***. *இது மேற்கு ஆசியாவின் வணிக, பண்பாட்டு மையமாக திகழ்ந்தது.*
- ✓ *கில்காமெஷ் காவியம் தான் உலகின் முதல் காவியமாக இருக்கலாம். பண்டைய சுமேரியாவில் கியூனிஃபார்ம் எழுத்து முறையைக் கொண்டு 12 களிமண் பலகைகளில் இது எழுதப்பட்டிருந்தது.*
- ✓ ***அஸிரிய பேரரசு உலகின் முதல் இராணுவ அரசு*** *எனக் கருதப்படுகின்றது. அவர்கள் ஒரு வலிமையான இராணுவ சக்தியாக உருவாவதற்கான காரணம், இரும்புத் தொழில் நுட்பத்தை நன்கு பயன்படுத்தியமைதான்.*

சிகுராட் என்றால் என்ன?

சிகுராட்கள் என்பது பண்டைய மெஸபடோமியாவில் (தற்போதைய ஈராக்) காணப்படும் பிரமிட் வடிவ நினைவிடங்கள் ஆகும். மிகவும் புகழ்பெற்ற சிகுராட் உர் என்ற நகரில் காணப்படுகிறது.

எழுத்து மற்றும் எழுத்துமுறை உருவாக்கம்

- ✓ *எழுத்து உருவாக்கப்பட்டது மனிதகுல வரலாற்றில் ஒரு முக்கியமான மைல் கல்லாகும்.*
- ✓ *4000 ஆண்டின் பிற்பகுதியில் சுமேரியாவின் எழுத்துமுறை உருவானது.*
- ✓ ***ஹைரோகிளிபிக் எனப்படும் சித்திர எழுத்துமுறை என்ற எகிப்திய எழுத்து முறை பொ.ஆ.மு. மூன்றாம் ஆயிரமாண்டின் துவக்கத்தில் உருவானது***.
- ✓ *இதே காலகட்டத்தில் ஹரப்பா மக்களும் ஒரு வித எழுத்து முறையை பின்பற்றினார்கள்.*
- ✓ *எனினும் சிந்துவெளி எழுத்துகள் இன்னமும் வாசித்துப் புரிந்துகொள்ளப் படவில்லை.*
- ✓ *சீனநாகரிகமும் ஆரம்ப காலத்திலிருந்தே தனக்கென்று ஒரு எழுத்துமுறையை உருவாக்கியது.*

சிந்து சமவெளி நாகரிகம்

- ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படும் சிந்து சமவெளி நாகரிகம் இந்தியாவிலும்,பாகிஸ்தானிலும் சுமார் 1.3 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் பரவியிருந்தது.
- மேற்கே பாகிஸ்தான்-ஈரான் எல்லையில் உள்ள சுட்ஜென்-டோர், வடக்கே ஷோர்டுகை (ஆப்கனிஸ்தான்) கிழக்கே ஆலம்கீர்பூர் (உத்திரப்பிரதேசம்-இந்தியா),தெற்கே டைமாபாத்(மஹாராஷ்ற்றா-இந்தியா)ஆகிய இடங்களை எல்லைகளாகக் கொண்டது இந்நாகரிகம்.
- இப்பரப்பில் ஹரப்பா நாகரிகத்துக்கான பல சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இந்நாகரிகம் பரவியுள்ள முக்கிய பகுதிகள் குஜராத், பாகிஸ்தான்,இராஜஸ்தான்,ஹரியனா.

திட்டமிடப்பட்ட நகரங்கள்

- **ஹரப்பா (பஞ்சாப், பாகிஸ்தான்), மொஹஞ்சதாரோ (சிந்து, பாகிஸ்தான்), தோலாவிரா (குஜராத், இந்தியா), கலிபங்கன் (ராஜஸ்தான், இந்தியா), லோதால் (குஜராத், இந்தியா), பானவாலி (ராஜஸ்தான், இந்தியா) ராகிகரி (ஹரியானா , இந்தியா), சுர்கொடா (குஜராத், இந்தியா, ஆகியவை சிந்துவெளி நாகரிகத்தின் முக்கியமான நகரங்கள்.**
- ஹரப்பா நகரங்களில் மதில் சுவர்கள், திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர்க் கால்வாய்கள் ஆகியவை காணப்படுகின்றன.
- ஹரப்பர்கள் சுட்ட, சுடாத செங்கற்களையும், கற்களையும் கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தினார்கள்.
- உள்ளாட்சி அமைப்பு ஒன்று நகரங்களின் திட்டமிடலை கட்டுப்படுதிதியிருக்கக் கூடும்.
- சில வீடுகளில் மாடிகள் இருந்தன.
- **மொஹஞ்சதாரோவில் உள்ள மாபெரும் குளியல் குளம் ஒரு முக்கியமான கட்டுமானமாகும்**.
- இக்குளத்தின் அருகே நன்கு தளமிடப்பட்ட பல அறைகளும் உள்ளன.
- **தோண்டியெடுக்கப்பட்ட சில கட்டுமானங்கள் களஞ்சியங்கள் போல் காணப்படுகின்றன.**
- ஹரப்பர்களின் அரசு அமைப்பு பற்றி நமக்கு விபரங்கள் தெரியவில்லை.
- ஆனால், பண்டைய அரசு போன்ற ஒரு அரசியலைமைப்பு ஒன்று இருந்திருக்க வேண்டும்.
- **மொஹஞ்சதாரோவிலிருந்து கிடைத்துள்ள ஒரு சிலை "பூசாரி அரசன்" என்று அடையாளம் காட்டப்படுகிறது.**
- ஆனால் அது சரியானதா என்று உறுதிப்படுத்த முடியவில்லை.

winmeen.com

வரைபடம் – சிந்துவெளி நாகரிக நகரங்கள்

- ✓ ஹரப்பாதான் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் என்பதால், சிந்துவெளி நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ✓ இந்த நாகரிகம் சிந்து நதிக்கு அப்பாலும் பரவியுள்ளதால் சிந்து சமவெளி நாகரிகம் என்று முன்னர் அழைக்கப்பட்டதற்கு மாறாக சிந்துவெளி நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது.

வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும்

- ஹரப்பா மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர்.
- அவர்கள் கோதுமை, பார்லி மற்றும் பலவிதமான தினை வகைகளைப் பயிரிட்டார்கள்.
- இரட்டைச் சாகுபடி முறையும் அவர்கள் கடைபிடித்தார்கள்.
- ஆடு மாடு வளர்த்தலும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.
- மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகளையும் அவர்கள் வளர்த்தார்கள்.
- யானை உள்ளிட்ட பல விலங்குகள் பற்றி அறிந்திருந்தார்கள்.
- ஆனால் குதிரைகளைப் பயன்படுத்தவில்லை.
- **ஹரப்பாவின் மாடுகள் ஜெபு என்றழைக்கப்படும்.**
- **இது ஒரு பெரிய வகை மாட்டின் இனம்.சிந்துவெளி முத்திரைகளில் இவ்வைகையான காளை உருவம் பரவலாகக் காணப்படுகிறது.**

மட்பாண்டக் கலை

- **ஹரப்பர்கள் ஓவியங்கள் தீட்டப்பட்ட மட்பாண்டங்களை பயன்படுத்தினார்கள்**
- மட்பாண்டங்கள் ஆழமான சிவப்பு வண்ணம் பூசப்பட்டு கருப்பு நிற ஓவியங்கள் தீட்டப்பட்டவை.

- பீடம் வைத்த தட்டு, தானியம் போன்றவற்றைச் சேமித்து வைப்பதற்கான ஜாடிகள், துளையிடப்பட்ட ஜாடிகள், கோப்பைகள், 'S' வடிவ ஜாடிகள், தட்டுகள்,சிறுதட்டுகள், கிண்ணங்க்கள், பானைகள் என்று பலவிதமான மட்பாண்டங்களைச் செய்தார்கள்.
- அவர்கள் மட்பாண்டங்களில் சித்திரங்களைத் தீட்டினார்கள்.
- அரசமர இலை, மீன் செதில், ஒன்றையொன்று வெட்டும் வட்டங்கள், குறுக்கும் நெடுக்குமான கோடுகள், கிடைக் கோட்டுப் பட்டைகள், கணித வடிவியல் (ஜியோமதி) வரடிவங்கள், செடி, கொடிகள் எனப் பல்வேறு ஓவியங்களைக் கருப்பு நிறத்தில் தீட்டினார்கள்.

உலோகக் கருவிகளும் ஆயுதங்களும்

- **ஹரப்பா பண்பாட்டு மக்கள் செர்ட் என்ற சிலிகா கல் வகையில் செய்த பிளேடுகள், கத்திகள், செம்புப் பொருட்கள், எலும்பாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தினார்கள்**.
- இரும்பின் பயனை அவர்கள் அறியவில்லை.
- கூர்மையான கருவிகள், உளிகள், ஊசிகள், மீன் தூண்டில் முட்கள், கத்திகள், நிறுவைத் தட்டுகள், முகம் பார்க்கும் கண்ணாடி, அஞ்சனம் தீட்டும் குச்சி ஆகியவை செம்பால் செய்யப்பட்டன.
- செம்பில் செய்த அம்புகள், ஈட்டிகள், உளி, கோடாரி ஆகிய கருவிகளைப் பயன்படுத்தினார்கள்.
- **மொஹஞ்சதாரோவில் கிடைத்துள்ள நடனமாடும் பெண்ணின் சிலை, அவர்களுக்கு மெழுகு அச்சில் உலோகத்தை உருக்கி ஊற்றி சிலை வார்க்கும் தொழில் நுட்பம் தெரிந்திருந்த்து என்பதைக் காட்டுகிறது**.

ஆடை, அணிகலன்கள்

- ஹரப்பா பண்பாட்டு மக்கள் பருத்தி மற்றும்பட்டு பற்றி அறிந்திருந்தார்கள்.
- உலோகத்தாலும் கல்லாலுமான அணிகலன்களைப் பயன்படுத்தினார்கள்.
- அவர்கள் செம்மணிக்கல் (கார்னிலியன்), செம்பு மற்றும் தங்கத்தாலான அணிகலங்களைச் செய்தார்கள்.
- கல் அணிகலன்களையும் சங்கு வளையல்களையும் செய்தார்கள்.
- சிலவற்றில் அணி வேலைப்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.
- இவற்றை அவர்கள் மெசபடோமியாவிற்கு ஏற்றுமதி செய்தார்கள்.

வணிகமும் பரிமாற்றமும்

- ஹரப்பர்களுக்கு மெசபடோமியர்களுடன் நெருங்கிய வணிகத் தொடர்பு இருந்தது.

- மேற்காசிய பகுதிகளான ஓமன், பஹ்ரைன், ஈராக், ஈரான் போன்ற பகுதிகளில் ஹரப்பன் முத்திரைகள் கிடைத்துள்ளன.
- **கியூனிபார்ம் ஆவணங்கள் மெசபடோமியாவிற்கும், ஹரப்பர்களுக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்பை எழுத்துகளில் காணப்படும் மெலுஹா என்ற குறிப்பு சிந்து பகுதியைக் குறிப்பதாகும்**.

பெருங்குளம்

மொகஞ்சதாரோ நடனப் பெண் சிற்பம்

சிந்து நாகரிக அணிகலன்கள்

ரோஹ்ரி செர்ட் பிளேடுகள்– ஹரப்ப பகுதி ஷிகர்பூர், குஜராத்

மதகுரு அல்லது அரசன், மொகஞ்சதாரோ

வண்ணம் தீட்டிய மட்பாண்டங்கள், ஹரப்பா

எடைகளும் அளவுகளும்

- ஹரப்பர்கள் முறையான எடைகளையும் அளவுகளையும் பயன்படுத்தினார்கள்.

- வணிகப் பறிமாற்றங்களில் ஈடுபட்ட காரணத்தால் அவர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட அளவுகள் தேவையாக இருந்தது.
- ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் கனசதுரமான செர்ட் எடைகள் கிடைத்துள்ளன.
- தராசுகளுக்கான செம்புத் தட்டுகள் கிடைத்துள்ளன.
- **எடைகள் அவர்களுக்கு ஈரடிமான எண் முறை (பைனரி) பற்றித் தெரிந்ததைக்காட்டுகின்றன**
- எடைகளின் விகிதம் 1;2;4;8;16;32 என்று இரண்டிரண்டு மடங்காக அதிகரித்தன

ஹரப்பா நாகரிக எடைக்கற்கள்

செப்புத் தராசு, மொஹஞ்சதாரோ

முத்திரைகள் எழுத்துருக்கள்

- **ஹரப்பா பண்பாட்டுப் பகுதிகளில் நுரைக்கல்,செம்பு,சுடுமண் தந்தம் ஆகியவற்றால் செய்யப்பட்ட முத்திரைகள் கிடைத்துள்ளன**.
- வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.
- **ஹரப்பன் எழுத்துக்கள் இதுவரை வாசிக்கப்படவில்லை**
- **ஹரப்பன் பகுதிகளிலிருந்து சுமார் 5000 எழுத்துடைய சிறு எழுத்துத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன**.
- சில அறிஞர்கள் இவை திராவிட மொழியின என்று உறுதியாகக் கருதுகிறார்கள்.
- **சிந்துவெளி நாகரிகமே இந்தியப் பண்பாட்டு உருவக்கத்துக்கான அடித்தளம் எனலாம்.**

எழுத்துக்களுடன் கூடிய முத்திரை

கலைகள், பொழுதுபொக்குகள்

- ஹரப்பா பகுதிகளில் கிடைத்துள்ள சுடுமண்ணாலான சிறுசிலைகள், மட்பாண்டங்களில் உள்ள ஓவியங்கள், வெண்கலச் சிலைகள் ஆகியவை ஹரப்பர்களின் கலைத்திறமையைக் காட்டுகின்றன.
- **மாக்கல்லில் செய்யப்பட்ட 'மதகுரு அல்லது அரசன்' செம்பில் வார்க்கப்பட்ட நடனமாடும் பெண் சிலை (இரண்டும் மொஹஞ்சதாரோவில் கிடைத்தவை), ஹரப்பா , மொஹஞ்சதாரோ தோலாவிராவில் கிடைத்த கற்சிலைகள் ஆகியவை இப்பகுதியின் முக்கியமான கலை படைப்புகள்**
- பொம்மை வண்டிகள், கிலுகிலுப்பைகள், பம்பரங்கள், கோலிக்குண்டுகள்,பல்வேறு விளையாட்டிற்கான சுடுமண் சில்லுகள் ஆகியவை ஹரப்பா மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுகளைக் காட்டுகின்றன,

சுடுமண் பொம்மைகள்

ஹரப்பன் மக்களும் பண்பாடும்

- ஹரப்பர்களின் எழுத்துகளுக்கான பொருள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதால், ஹரப்பா நாகரிகம் பற்றி முழுமையாக அறிய முடியாமல் உள்ளது.
- **அவர்கள் திராவிட மொழியைப் பேசினார்கள் என்று அறிஞர்களில் ஒரு சாரார் கூறுகிறார்கள்**.
- தொல்லியல் ஆய்வுகள் நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர்கள் கிழக்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் இடம் பெயர்ந்த்தைக் காட்டுகின்றன.
- ஹரப்பா மக்களில் சிலர் இந்தியாவின் பல்வேறு இலங்களுக்கும் குடிபெயர்ந்திருக்க வாய்ப்புகள் உண்டு.
- அவர்களது எழுத்துக்கு பொருள் கண்டுபிடிக்கப்பட்டால் மட்டுமே பல கேள்விகளுக்கு உறுதியான பதில் கிடைக்கும்.
- சிந்துவெளி நாகரிகத்தில் ஒன்றுக்கும் அதிகமான குழுக்கள் இருந்தன.
- **சிந்துவெளியில் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், வேட்டையாடுவோர்-உணவு சேகரிப்போர் உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் வாழ்ந்திருக்கிறார்கள்**.

- **சிந்துவெளி கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகிறது; பொ.ஆ.மு 3300 முதல் பொ.ஆ.மு 2600 வரையான காலகட்டம் ஹரப்பா என அழைக்கப்படுகிறது.**
- **பொ.ஆ.மு 2600-1900 வரையான காலகட்டம் முதிர்ந்த ஹரப்பா நாகரிகம் எனப்படுகிறது.**
- **பிந்தைய ஹரப்பா பொ.ஆ.மு 1700 வரை நீடித்திருக்கலாம்.**

சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சி

- சுமார் பொ.ஆ.மு 1900லிருந்து சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சி பெறத் துவங்கியது.
- **பருவநிலை மார்ரம், மெசடோமியாவுடனான வணிகத்தில் வீழ்ச்சி, நதியின் வறட்சி அல்லது வெள்ளப்பெருக்கு,அந்நியர் படையெடுப்பு ஆகியவை இந்த நாகரிகம் வீழ்ச்சி பெறவும், மக்கள் தெற்கு மற்றும் கிழக்கு திசை நோக்கி இடம் பெயரவும் சில முக்கியமான கரணங்களாக அமைந்தன எனக் கருதப்படுகிறது.**
- சிந்துவெளி நாகரிகம் முற்றிலுமாக அழிந்துவிடவில்லை, அது கிராமப் பண்பாடாக இந்தியாவில் தொடர்ந்தது.

சிந்துவெளி நாகரிகமும், தமிழர் நாகரிகமும்

- ✓ தென்னிந்தியாவின் பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளில் காணப்படும் கோட்டுருவக் குறியீடுகள் சிந்துவெளி எழுத்துகளை ஒத்திருப்பதும் , தமிழக ஊர் பெயர்கள் – பாகிஸ்தானின் சிந்து பகுதி ஊர் பெயர்கள் ஒத்துள்ளமையும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் தமிழ் பண்பாட்டிற்கும் உள்ள உறவை நிறுவ வாதங்களாக முன்வைகப்படுகின்றன.
- ✓ **அருட்தந்தை ஹென்றி ஹெராஸ், அஸ்கோ பர்போலா, இராவதம் மகாதேவன் போண்ற ஆய்வாளர்களும் சிந்துவெளி எழுத்துக்கும் திராவிட/தமிழ் மொழிக்கும் இடையே ஒற்றுமை நிலவுவதை இனங்கண்டுள்ளார்கள்**.
- ✓ தொல்லியல் சான்றுகள் இடைக் கற்காலத்திலிருந்தே தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவிலும் பல மக்கள் குழுக்கள் தொடர்ச்சியாக வசித்து வந்ததைக் காட்டுகின்றன.
- ✓ சிந்துவெளியின் சியல் கருத்துக்களும் தொழில்நுட்பங்களும் தென்னிந்தியாவை அடைந்துள்ளன.
- ✓ தமிழ்நாட்டின் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த, அகழ்வாய்வுப் பகுதிகளில் கிடைத்துள்ள கார்னீலியன் பாசிமணிகள், சங்கு வளையல்கள், செம்பு முகம்பார்க்கும் கண்ணாடிகள் ஆகியவை முதலில் சிந்துவெளி மக்களால் அறிமுகம் செய்யப்பட்டவை எனக் கருதப்படுகிறது.
- ✓ மக்கள் இடம் பெயராமலயே கருத்துக்களும், அறிவும், பொருட்களும் தொலை தூரங்களுக்குப் பரவ முடியும்.
- ✓ இவ்வாத்திற்கு தெளிவான முடிவுகள் பெற மேலதிகமான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்.

- ✓ தமிழகத்தின் பண்டைய நகரங்களான கீழடி, அரிக்கமேடு, உறையூர் போன்றவை இந்தியாவின் இரண்டாவது நகரமயக் காலகட்டத்தில் தழைத்தோங்கின.
- ✓ இந்த நகரங்கள் சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சி அடைந்து சுமார் *1200* ஆண்டுகள் கழித்து உருவானவை.

winmeen.com